இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 08-01-2025

# முதலமைச்சரின் உலகப் பரிசு

ஒரு மாநிலத்தின் முதலமைச்சர், உலகளாவிய பரிசு ஒன்றை அறிவித்திருப்பது உலக வரலாற்றில் இதுவே முதல் முறையாக இருக்கும். இதுவே, இந்த திராவிடவியல் கோட்பாட்டு ஆட்சியின் மாபெரும் சாதனையாகும். இதன் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் புகழ் உலகம் சுற்றும் புகழாக அமைந்துவிட்டது.

சிந்துவெளி எழுத்துகளில் 100 ஆண்டுகளாகப் புதைந்திருக்கும் புதிருக்கு விடை கண்டுபிடித்தால் எட்டரை கோடி ரூபாய் பரிசு என்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை சார்பில் சிந்துவெளி பண்பாட்டு கண்டுபிடிப்பு நூற்றாண்டு நிறைவு பன்னாட்டு கருத்தரங்கத்தைத் தொடங்கி வைத்து உரையாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் மூன்று முக்கியமான அறிவிப்புகளைச் செய்துள்ளார்கள்.

இதில் முதலாவது அறிவிப்பானது உலக ஆய்வாளர்கள் அனைவருக்குமானது.

**"செழித்து வளர்ந்த சிந்துவெளிப் பண்பாட்டின் எழுத்து முறையை இன்னும் தெளிவாக புரிந்து கொள்ள இயலவில்லை. நூறு ஆண்டுகளைக் கடந்தும் தீர்க்கப்படாத இந்த சிந்துவெளி புதிர் குறித்து உலகெங்கும் உள்ள தொல்லியல் ஆய்வாளர்கள், மொழியில் அறிஞர்கள் மற்றும் கணினி வல்லுநர்கள் உட்பட பலரும் இன்றளவும் பெரும் முயற்சி செய்து வருகின்றனர். அம்முயற்சிகளை ஊக்கப்படுத்தும் வகையில் சிந்துவெளிப் புதிருக்கான உரிய விடையினை கண்டுபிடித்து, சிந்துவெளி எழுத்து முறையினைத் தெளிவாக புரிந்து கொள்ள உதவும் வழி வகையினை தொல்லியல் அறிஞர்கள் ஏற்கும்படி வெளிக்கொணரும் நபர்கள் அல்லது அமைப்பிற்கு ஒரு மில்லியன் அமெரிக்க டாலர் ( 8 கோடியே 57 லட்சத்து 70 ஆயிரம்) பரிசாக வழங்கப்படும்"** என்று சொல்லி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

சிந்துவெளி நாகரிகம் முதன்முதலில் 1924ஆம் ஆண்டு செப்டம்பர் 20 ஆம் நாளன்று உலகிற்கு அறிவிக்கப்பட்டது. அதனை 'தி இல்லஸ்டிரேட் லண்டன் நியூஸ்' என்ற இதழில் சர் ஜான் மார்ஷல் அறிவித்தார். இந்த அறிவிப்பு இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாற்றில் ஒரு திருப்புமுனையை உண்டாக்கியது. இதனைத்தான் தமிழ்நாடு அரசு கொண்டாடிக் கொண்டு இருக்கிறது. ஜான் மார்ஷலுக்கு சிலை வைப்பதற்கான அடிக்கல்லை நாட்டி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள். இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இத்தகைய ஒரு மாநாடு நடத்தப்பட்டது இல்லை. சிந்துச் சமவெளி ஆய்வு நூற்றாண்டு விழாவும் கொண்டாடப்பட்டு இருக்காது.

சிந்துவெளி நாகரிகத்துக்கும் தமிழர் நாகரிகத்துக்குமான தொடர்பும், ஒற்றுமையும் மெய்ப்பிக்கப்பட்டு விட்டது. கீழடி காளைகள்தான், சிந்துவெளியிலும் இருக்கிறது. நமது தாய்த்தெய்வ வழிபாடு அங்கும் இருக்கிறது. கீழடி கட்டடக் கலையும் மண்பாண்டங்களும் சிந்துவெளியிலும் இருக்கின்றன. இந்த வரிசையில் ஆர்.பாலகிருஷ்ணனின் ஆய்வு அடுத்த கட்டத்துக்கு நகர்த்தியது.

ஆர்.பாலகிருஷ்ணன் எழுதிய 'சிந்து முதல் வைகை வரை' நூலானது நாம் பயன்படுத்தும் முக்கியமான தமிழ்ச் சொற்களில் பெரும்பாலானவை சிந்துவெளிப் பகுதியாக முன்பு இருந்த பகுதிகளில் இப்போதும் பயன்படுத்தப்படும் சொற்களாக இருக்கின்றன என்பதை மெய்ப்பித்தார்.

கொற்கை, வஞ்சி, தொண்டி, ஊர், பட்டி, பள்ளி, பாரி, பேகன், கரிகாலன், சோழன், சேரல், உதியன், மாறன், சாத்தனார், கபிலர், நக்கீர, கோட்டை, வேல், - ஆகிய சொற்கள் மருவிய சொற்களாக இன்னமும் பாகிஸ்தான், ஆப்கன் ஆகிய நாடுகளிலும் இந்தியாவில் குஜராத், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களிலும் பயன்பாட்டில் இருப்பதாக அவர் சொல்லி இருக்கிறார். கண்ணகி தெய்வமாக தமிழ் மரபில் இருப்பதைப் போல குஜராத்தில் கண்கை கோவிலும், கண்கேஸ்வரி கோவிலும் உள்ளதாகச் சொல்கிறார். மொகஞ்சதாரோ பெண்கள் சிலம்பு அணிந்துள்ளார்கள். தமிழ்நாடு வாக்காளர் பட்டியலில் இப்போது கண்ணகி என்ற பெயரில் 24 ஆயிரத்து 710 பெண்கள் இருக்கிறார்கள் என்கிறார். பாகிஸ்தான், ஆப்கனில் 'கண்ணகி' என்ற பெயர் மருவி இன்னமும் இருக்கிறது என்கிறார்.

**இந்த வரிசையில் சிந்துவெளி எழுத்து முறை குறித்து ஆராய வேண்டி உள்ளது. நூறாண்டு காலமாக விடுவிக்கப்படாமல் உள்ள சிந்துவெளி எழுத்து முறை குறித்த புதிர்களை விடுவிப்பதில் உள்ள சிக்கல்கள், சவால்கள், வழி முறைகளை ஆராயவே இந்த கருத்தரங்கை நிதி மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசும், நிதித் துறை செயலாளர் மற்றும் தொல்லியல் துறை ஆணையர் உதயச்சந்திரனும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளார்கள்.**

'சிந்துவெளி வரிவடிவங்களும் தமிழ்நாட்டுக் குறியீடுகளும்' என்ற தலைப்பில் ஆய்வாளர்கள் கா.ராஜன், இரா.சிவானந்தம் ஆகிய இருவரும் இணைந்து எழுதிய கட்டுரையில், "சிந்துவெளி மக்கள் நன்கு வளர்ச்சி எழுத்துமுறையைப் பெற்றிருந்தனர். இத்தகைய வரி வடிவங்களாக இது வரை 4 ஆயிரம் சான்றுகள் கிடைத்துள்ளன. நீளமான சொற்றொடராக 26 வரி வடிவங்கள் காணப்படுகின்றன. பல்வேறு ஆய்வாளர்கள் சிந்துவெளி எழுத்து மொழி, மூல- திராவிட மொழி என்று கருதினார்கள். சிலர் இந்தோ ஐரோப்பிய மொழி எனக் கருதினார்கள். சிலர் இவை குறியீடுகள் மட்டுமே என்றும் சொல்கிறார்கள். தமிழ்நாட்டில் காணப்படும் பல குறியீடுகள் சிந்துவெளி எழுத்துக்களின் இணையாக விளங்குகின்றன. சில குறியீடுகளும் ஒரே மாதிரியாக உள்ளன. ஏறத்தாழ 60 விழுக்காடு குறியீடுகள் சிந்துவெளி எழுத்துக்களில் இணையாகக் காணப்படுகின்றன" என்று குறிப் பிட்டுள்ளார்கள். இவை அனைத்தையும் கொண்டு சிந்துவெளி மக்கள் பயன்படுத்திய மொழி எது என்பதைக் கண்டறிய முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

**இந்தியாவிலேயே முதன்முறையாகத் தொல்லியல் ஆழ்கடல் கள ஆய்வை விரிவாக மேற்கொள்ள பெருமுயற்சி எடுத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். இன்றைய முதலமைச்சர் அவர்கள் சிந்துவெளி எழுத்துகளின் புதிர்களை விடுவிக்க முயற்சிகள் எடுத்துள்ளார்கள். முதலமைச்சரின் அறிவிப்பானது அவரது பெயரை உலகமே உன்னிப்பாக கவனிக்க வைத்திருக்கிறது.**

## இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு

# தமிழ்நாடு முழுவதும் 6.36 கோடி வாக்காளர்கள்!

சென்னை, ஜன. 8 -

தமிழ்நாடு முழுவதும் 6 கோடியே 36 லட்சத்து 12 ஆயிரத்து 950 வாக்காளர்கள் இருப்பதாக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் முதல் நவம்பர் மாதம் வரை வாக்காளர் பட்டியலில் பெயர், சேர்க்க, திருத்தம் மற்றும் நீக்குவதற்கான சிறப்பு முகாம்கள் நடைபெற்றன. பெறப்பட்ட படிவங்கள் அனைத்தும் ஆய்வு செய்யப்பட்டு உரிய விண்ணப்பங்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதனையடுத்து, சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம், 2025ன், இறுதி வாக்காளர் பட்டியலை, தலைமைச் செயலகத்தில், தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் நேற்று முன்தினம் வெளியிட்டார்.

இதன்படி தமிழ்நாட்டில் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 6 கோடியே 36 லட்சத்து 12 ஆயிரத்து 950 என்றும், 3 கோடியே 11 லட்சத்து 74 ஆயிரத்து 27 ஆண் வாக்காளர்களும், 3 கோடியே 24 லட்சத்து 29 ஆயிரத்து 803 பெண் வாக்காளர்களும், மூன்றாம் பாலினத்தவர் 9 ஆயிரத்து 120 பேரும் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

18 வயது நிரம்பிய தகுதி உள்ள நபர்கள் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாமல் இருந்தால் தேர்தல் ஆணைய இணைய தளம் மற்றும் வோட்டர் ஹெல்ப்லைன் செயலி மூலமும் விண்ணப்பிக்கலாம் என தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (6.1.2025) முகாம் அலுவலகத்தில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி அவர்கள் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் அவரது மகனும், சட்டமன்ற உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார் உள்ளார்.

# சட்டப் பேரவையில் அவை முன்னவர் - நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் விளக்கம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

சிறப்பையும் காக்கின்ற வகையில் முதலமைச்சர் அவர்கள் எழுந்து, பேரவைத் தலைவரின் இசைவோடு, மூத்த மொழியாம் நம் இனிய தாய்மொழியில் - தமிழில், தீர்மானத்தை மொழிந்தது, ஆளுநர் அவர்களுக்கு அப்போது புரிந்திருக்காது.

2024-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 12-ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பேரவையில் உரையாற்றுகையிலும், இதே முறையைத் தொடர்ந்ததால் அன்றைக்கு என்னால் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட அது இப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

முன்னாள் குடியரசுத் தலைவர், ராம் நாத் கோவிந்த் அவர்கள் தமிழ்நாடு சட்டப்பேரவையின் நூற்றாண்டு விழா 2021-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 2-ஆம் நாள் நடைபெற்றபோது அனுப்பிய வாழ்த்துச் செய்தியை இங்கே நினைவு கூர்கிறேன்.

'much of the richness of Indian Democracy is derived from the Tamil Nadu Legislature and is appreciated all across the world'. என்று தெரிவித்திருக்கிறார்கள். இவ்வளவு பெருமை கொண்ட தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் புகழ் மங்கி விடாமல் பாதுகாத்து நிற்க வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது.

அரசமைப்புச் சட்டப்பிரிவு 176-இன் கீழ் ஒவ்வொரு ஆண்டின் தொடக்கக் கூட்டத்தொடரிலும் ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்துகிறார்கள் என்பதை அரசியல் சட்டத்தில் மிக விவரமாக தெரிவித்து இருக்கிறார்கள்.

As per Article 176 of the Constitution of India, "The Governor shall address the Legislative Assembly and inform the legislature of the causes of its summons". But, our Hon'ble Governor is acting against the constitution, which is not good. I am to remind this House, that in 1995, the Government brought a Govern ment Resolution to recall the then Governor Dr. M. Chenna Reddy. Even then, Governor has read the Governor's Address as prepared by the Government in 1996.

நான் ஒன்றை இந்தப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மறைந்த முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்களுக்கு ஆளுநர் பதவி குறித்து மாறுபட்ட கருத்துகள் இருந்தாலும், ஆளுநர் பதவி உள்ள வரை, அப்பதவியில் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கும் நிலையில், அவருக்குரிய மரியாதை அளிக்கப்பட வேண்டுமென்ற கருத்து கொண்டவர்.

கடந்த பேரவைக் கூட்டத் தொடரை முடித்து வைக்காமல், ஆளுநர் உரையைத் தவிர்த்து, மற்ற சில மாநிலங்களில் முடிவெடுப்பது போன்று, நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கலாம். ஆனால், கலைஞர் அவர்களுடைய வழித்தடங்களைப் பின்பற்றி ஆட்சி புரிகிற நமது முதலமைச்சர் அவர்கள் நாம் மரபு மீறக்கூடாது என்ற பண்போடு ஆளுநர் உரைக்காக பேரவையைக் கூட்ட யோசனை வழங்கினார்.

மீண்டும் ஆளுநர் அவர்கள் முந்தைய ஆண்டுகளில் செய்துள்ளதையே திரும்பச் செய்திருக்கிறார். அதாவது, ஆளுநர் உரையை முழுமையாகப் படிக்காமல் சென்றிருக்கிறார். தற்போது ஆளுநர் அவர்கள் தமிழ்த்தாய் வாழ்த்துக்குப் பிறகு, தேசியகீதம் பாடப்படாதது தொடர்பாக ஒரு கருத்தைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக, கடந்த ஆண்டு ஆளுநர் அவர்கள் இதே கருத்தைக் கோடிட்டு, பேரவைத் தலைவர் அவர்களுக்கு கடிதம் அனுப்பியிருந்தார்.

அந்தக் கடிதத்திற்கு அப்போதே பதில் அளித்து, இந்த அவையில் பின்பற்றப்படும் மரபின் அடிப்படையில் ஆளுநர் உரையின் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்தும், உரையின் நிறைவில் தேசிய கீதமும் பாடப்படுவதே பின்பற்றப்பட்டு வருவதை தெளிவாகத் தெரிவித்திருந்தீர்கள். ஆனாலும், மீண்டும் இன்று அதையே ஒரு பிரச்சினை யாக ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டு, அவர் அரசு அனுப்பிய உரையைப் படிக்காமல் சென்று விட்டது, அவரது உண்மையான நோக்கம் என்ன என்பதைக் கேள்விக்குறியாக்குகிறது.

இந்த நாட்டின்மீதும், தேசிய கீதத்தின்மீதும் பெரும் மதிப்பை தமிழ்நாட்டு மக்களும், இந்தப் பேரவை உறுப்பினர்களும் என்றென்றும் கொண்டுள்ளார்கள். தேசிய ஒருமைப்பாட்டிலும், நாட்டுப் பற்றிலும், தேசத் தலைவர்கள் மீதும் என்றும் மாறாத நன்மதிப்பினைக் கொண்டது இந்த அரசு.

**பேரவைத் தலைவர் அவர்களே,**

திராவிட முன்னேற்றக் கழகத்தின் உண்மைச் சீடராக, திராவிடச் சமூகத்திலிருந்து உதித்த சுயமரியாதைக் கனலாக செயல்படும் முதலமைச்சர் அவர்கள் கட்டிக் காத்து வரும் இச்சட்டமன்றப் பேரவையின் மாண்பினை நிலைநாட்டிடும் வகையில் - பேரவைத் தலைவரின் இசைவோடு, சட்டமன்றப் பேரவை விதி 17-யை தளர்த்தி இது தொடர்பான ஓர் தீர்மானத்தினை முன்மொழிந்திட தங்கள் அனுமதியை கோருகிறேன்.

**தீர்மானம்**

**பேரவைத் தலைவர் அவர்களே,**

ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு அரசால் விதிகளின்படி அனுப்பி வைக்கப்பட்ட ஆளுநர் உரையைப் படிக்காமல் சென்றுவிட்டார். ஆளுநர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட உரை அச்சிடப்பட்டு அவையின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இந்தியாவில் உள்ள பிற சட்டமன்றப் பேரவைகளுக்கு மட்டுமல்லாது, உலக அளவில் உள்ள சட்டப்பேரவைகளுக்கும் எடுத்துக்காட்டாகவும், நூறாண்டு வரலாற்றுப் பெருமைகொண்ட இம்மாமன்றத்தின் மக்களாட்சி மாண்பினை உயர்த்திப் பிடிக்கவும், மரபைக் காத்திடவும், அச்சிடப்பட்ட ஆளுநர் உரையில் இடம்பெற்றுள்ள பகுதிகள் மட்டுமே அவைக்குறிப்பில் பதிவுசெய்திட வேண்டுமென்ற தீர்மானத்தை நான் மொழிகிறேன்.

இவ்வாறு அவை முன்னவர் - அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிந்தார். அவை முன்னவரின் தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

# பத்திரப்பதிவு மூலம் ரூ.15 ஆயிரம் கோடி வருவாய்!

சென்னை, ஜன.8–

தமிழ்நாட்டில் 25 லட்சம் ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பத்திரப்பதிவு மூலம் தமிழ்நாடு அரசுக்கு ரூ.15 ஆயிரம் கோடி வருவாய் கிடைத்துள்ளது. இது கடந்த ஆண்டை விட ரூ.2 ஆயிரம் கோடி அதிகம் ஆகும். T கட்டணம் தமிழகத்தில் வணிகவரி (ஜி.எஸ்.டி.), மது விலக்கு ஆயத் தீர்வை (டாஸ்மாக்) துறைகளுக்கு அடுத்தப்படியாக அதிக வருமானம் ஈட்டி தரும் துறையாக பத்திரப் பதிவு துறை இருக்கிறது. பொதுமக்கள் தாங்கள் வாங்கும் வீடு, நிலம், வணிக வளாகம், தொழிற்சாலை உள்ளிட்ட எந்த சொத்தாக இருந்தாலும், பத்திரப்பதிவு துறை யில் பதிவு செய்ய வேண்டும். அதற்கு கட்டணமாக சொத்தின் மதிப்புக்கு ஏற்ப மொத்தம் 9 சதவீதம் கட்டணம் செலுத்த வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டும், பத்திரப்பதிவுகள் அதிகரித்து வரு வதால் வருமானமும் கூடி கொண்டே செல்கிறது. அதன்படி 2024–25ம் நிதியாண்டில் ஏப்ரல் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை 25 லட்சத்து 3 ஆயிரத்து 365 ஆவணங்கள் பதிவுசெய்யப்பட்டு ரூ.15 ஆயிரத்து 582 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

இதேகாலகட்டத்தில் கடந்த 2023ம் ஆண்டு 24 லட்சத்து 93 ஆயிரத்து 80 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டு ரூ.13 ஆயிரத்து 610 கோடி வருமானம் ஈட்டப்பட்டு உள்ளது. அதன்படி, இந்தாண்டு 10 ஆயிரத்து 285 ஆவணங்கள் அதிகம். அதே போல் வருமானமும் ரூ.1,972 கோடி அதிகரித்துள்ளது. ரூ.18 ஆயிரம் கோடி... கடந்த 2023ம் ஆண்டு நிதியாண்டில் அதாவது ஏப்ரல் மாதம் முதல் மார்ச் மாதம் முடிய பத்திரப்பதிவுத்துறை ரூ.17 ஆயிரத்து 296 கோடி வருமானம் ஈட்டி இதுவரை இல்லாத அளவிற்கு சாதனை படைத்து இருந்தது. இந்த சாதனை இந்தாண்டு மீண்டும் முறியடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏனென்றால் இதுவரை ரூ.15 ஆயிரத்து 582 கோடி வருவாய் கிடைத்து உள்ளது. இன்னும் கூடுதலாக ரூ.1,715 கோடி தான் தேவை. இன்னும் மார்ச் மாதம் 31ந் தேதி வரை உள்ளதால் வரும் தை, மாசி மாதங்களில் அதிகளவு பத்திரப்பதிவு நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இந்தாண்டு ரூ.18 ஆயிரம் கோடியை தாண்டி விடும் என்றும் அதிகாரி ஒருவர் கூறினார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணப்பாறை சிப்காட் வளாகத்தில் நடைபெறவுள்ள பாரத சாரண, சாரணியர் இயக்கத்தின் வைரவிழா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்புப் பெருந்திரளணிக்கான பாடலை நேற்று முன்தினம் (6.1,2025) வெளியிட்டு, இணையதளத்தை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக்கல்வித் துறை இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தனியார் பள்ளிகள் இயக்கக இயக்குநர் முனைவர் மு.பழனிச்சாமி, தொடக்கப்பள்ளி இயக்குநர் முனைவர் பூ.ஆ.நரேஷ் மற்றும் பள்ளிக் கல்வித் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



அண்ணல் அம்பேத்கர் விருதுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தெரிவு செய்யப்பட்டிருப்பதையொட்டி விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர் துரை.ரவிக்குமார், அமைச்சர் முனைவர் க.பொன்முடியை விழுப்புரத்தில் அவரது இல்லத்தில் சந்தித்து வாழ்த்துக்களைப் பெற்றார். அமைச்சர் சி.வெ.கணேசன், விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி ஆகியோரும் வாழ்த்தினார்கள். வி.சி.க. மாவட்டச் செயலாளர் பொன்னிவளவன், ஒன்றியச் செயலாளர் கல்பட்டு வி.ராஜா மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.